# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 10430/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

**முன்னிலை** — **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**
**மாநில தகவல் ஆணையர்.**

**மனுதாரர்:** — திரு ஆர் பாலகிருஷ்ணன்
220, ரோடு தெரு, நம்பேடு கிராமம் & அஞ்சல்
போலூர் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம்.

**பொது அதிகார அமைப்பு:** — பொதுத் தகவல் அலுவலர்
துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
போளூர், திருவண்ணாமலை மாவட்டம்

***

மனுதாரர் திரு ஆர் பாலகிருஷ்ணனும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் போளூர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தனர்.**

மனுதாரர் 6.1.09 அன்று 5 இனங்களில் சில உட்பிரிவுகளுடன் தகவல்கள் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரருக்கு உரிய தகவல்கள் தரப்படாததால் 21.1.09 அன்று மற்றும் 10.2.09 அன்று மேல் முறையீடுகள் செய்துள்ளார். 18.2.09 அன்று தகவல்கள் தரப்பட்டுள்ளன. மனுதாரருக்கு முழுத் தகவல்கள் கிடைக்கவில்லை என்று 24.5.09 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் குறிப்பிட்ட ஒரு சில இனங்களில் 5 உட்பிரிவுகளுக்கு தகவல்கள் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார். மனுதாரர் மேல் முறையீட்டில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் இனம் 1 (ஆ) 1 (ஊ), 2 (ஏ) மற்றும் 5க்கு அவ்வலுவலகத்தில் தகவல்கள் இல்லாததால் தகவல்கள் தரப்படவில்லை என்று விசாரணையில் முடிவு செய்யப்படுகிறது. வரிசை எண் 3க்கு அவ்வலுவலகத்திற்கு 7.4.08 அன்று வட்டார வளர்ச்சி அலுவலர் மீது அனுப்பப்பட்ட புகார் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விவரம் தரப்படவில்லை என்று முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

வட்டார வளர்ச்சி அலுவலர் மீது அனுப்பப்பட்ட புகார் மனு மீது பெறப்பட்ட நாள் முதல் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இனம் 3ல் 9 உட்பிரிவுகளுக்கு உரிய தகவல்களை இவ்வாணை பெறப்பட்ட 10 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தினை ஆணைத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**

**ஆணையத்தின் ஆணைப்படி**

**உதவிப் பதிவாளர்**

பொதுத் தகவல் அலுவலர்
துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்
போளூர், திருவண்ணாமலை மாவட்டம்

திரு ஆர் பாலகிருஷ்ணன்
220, ரோடு தெரு,
நம்பேடு கிராமம் & அஞ்சல்
போலூர் தாலுகா,
திருவண்ணாமலை மாவட்டம்.